**OS.NO: 50/2024**

**PW 1 :** உமா க/பெ.வெங்கடேசன்

நாள் : 20.01.2026

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

எனது பெற்றோருக்கு 5 மகள்கள் மற்றும் 1 மகன் பிறந்தார்கள் என்று சொன்னால் சரிதான். ஒரு மகள் சிறுவயதிலேயே இறந்து விட்டார். பிரேமா, கலைச்செல்வி, உதய சூரியன், உஷா, உமா மற்றும் மலர் என்று சொன்னால் சரிதான். அதில் உஷா சிறுவயதிலேயே இறந்து விட்டார். மலர் இறந்து 25 ஆண்டுகள் ஆகிறது. மலரின் கணவர் வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு சென்று விட்டார். மேற்படி உஷா மற்றும் மலர் இறந்தது குறித்து மலரின் கணவர் வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டதை பற்றி பிராதில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். மலருக்கு குழந்தை பிறந்து இறந்துவிட்டது. 1970-ல் பிரேமாவுக்கு திருமணம் ஆனது என்று சொன்னால் சரிதான். கலைச்செல்விக்கு 1984-ல் திருமணம் நடைப்பெற்றது. எனக்கு 1985-ல் திருமணம் நடைப்பெற்றது. இந்து வழக்கில் நிலம் மற்றும் வீட்டின் பாகம் கோறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரேமா காவேரிபாக்கத்தில் வசித்து வருகிறார். கலைச்செல்வி சென்னை பாடியில் வசித்து வருகிறார். நான் ஆரணியில் வசித்து வருகிறேன். தாவா சொத்து நிலத்தை சுற்றி யார் யார் நிலம் உள்ளது என்று கூறவில்லை என்று சொன்னால் சரிதான் எனக்கு படிப்பறிவு இல்லாததால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. எனது தந்தை என்ன வேலை செய்தார் எவ்வளவு வருமானம் ஈட்டினார் என்ற விவரம் பற்றி பிராதில் கூறிவில்லை என்று சொன்னால் சரிதான் எனது தந்தை மாதம் ரூ.5, ரூ.6 க்கு பால் கறந்து வியாபாரம் செய்து வந்தார்.எனது தாயார் பெயரில் மேற்படி நிலத்தை வாங்கிய போது எனக்கு என்ன வயது என்று எனக்கு நியாபகம் இல்லை. எனது குடும்பத்தில் மூத்தவர் பிரேமா என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி எனக்கு அண்ணன். அவர் பெயருக்கு எனது அம்மா தாவா முதல் item சொத்தை குறித்து செட்டில்மண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. இன்றைய தேதி வரை தாவா சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது குறித்து வில்லங்கம் ஏதாவது வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. நான் என் தாயாரின் பெயரில் தான் சொத்து உள்ளது என்று இருந்தேன். இன்றைய தேதி வரை தாவா சொத்தை பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். அதற்கு முன்பு கொடுத்தார்கள் தற்போது கொடுக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் வழக்கறிஞர் அறிவிப்பை பிரவாதிக்கு அனுப்பியிருந்தேன். அதில் நான் பிரதிவாதி ஏற்கனவே நிலத்தில் இருந்து வந்த வருமானத்தில் பாகம் கொடுத்ததாக எந்த விவரமும் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு தாக்கல் செய்ததிலிருந்து எந்த பாகமும் கொடுக்கவில்லை. என்னுடைய பிராதில் கூட அந்த விவரத்தை கூறவில்லை என்றும் தற்போது தான் முதல் முறையாக கூறுகிறேன் என்று சரிதான். நான் அனுப்பிய அறிவிப்புக்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். என் தந்தை 1987-ல் இறந்தார். என் தாய் 2007-ல்

இறந்தார். தாவா சொத்தில் உள்ள வீடு எனது தாயாருக்கு சொந்தமானது என்று நிரூபிக்க இந்த வழக்கில் ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வீட்டை எனது அண்ணன் 1990–ஆண்டு நாராயணசாமியிடமிருந்து கிரையம் வாங்கி உள்ளார் என்று சொன்னால் அது பூர்வீக சொத்து,. அந்த விவரத்தை தான் என்னுடைய வழக்கிலும் கூறியுள்ளேனா என்றால் ஆமாம். நான் மேற்படி வீடு எனது தாயாருக்கு சொந்தமானது பற்றியோ அல்லது எனது தந்தைக்கு சொந்தமானது பற்றியோ எந்த விவரமும் கூறாமல் முதல் முறையாக தற்போது தான் பூர்வீக சொத்து என்று கூறிகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்வடி வீட்டின் மொத்த விஸ்திரனம் 3027 சதுரடி. அந்த வீட்டை சுற்றி யார் யார் வசிக்கிறார்கள் என்பதை பற்றி தாவாவில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது தந்தை 1997–ல் இறந்த பிறகு பாகம் கோறி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனது தாயார் 2007 ல் இறந்த பிறகும் பாகம் கோறி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் 17 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பூர்வீக சொத்தில் இருந்த வீடு இடிந்து போனதால் எனது அண்ணன் தான் அதனை கட்டினார் என்றால் சரியல்ல. நாங்களும் சேர்ந்து தான் கட்டினோம். மேற்படி வீட்டை கட்டியது எனது அண்ணன் தான் என்றும் நான் கூறுவது உண்மையாக இருக்கு பட்சத்தில் அதைப்பற்றிய விவரத்தை என்னுடைய பிராதிலம் வழக்கறிஞர் அறிவிப்பிலும் கூறியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. என தாயார் இறந்த பிறகு எனது அண்ணன் எங்களுக்கு நகைகள் கொடுத்தாரா என்றால் இல்லை. எனது அண்ணன் நகைகள் மற்றும் பணத்தை பெற்று கொண்டதால் தான் நான் எந்த வழக்கையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா முதல் ஐட்ட சொத்து எனது தாயாரின் தனிப்பட்ட சொத்து என்றும் அதை எனது அண்ணனுக்கு செட்டில்மண்ட பத்திரம் எழுதி கொடுத்துவிட்டதால் அதில் நாங்கள் எந்த பாகமும் கோற முடியாது என்று சொன்னால் சரியல்ல. வீட்டை பொறுத்தவரை அது மனையாக இருந்தது என்றும் அதில் 05.06.1990 அன்று கிரையம் பெற்று எனது அண்ணன் தான் வீட்டை கட்டினார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வீடு எங்கள் அண்ணனுக்கு சொந்தமானது என்பதால் அதிலும் நாங்கள் எந்த பாகமும் கோற முடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இருந்ததாக கூறிய விவரம் தவறு என்றும் அது பிரதிவாதியின் தனிப்பட்ட அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றும் ஆகையால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் பிரதிவாதிக்கு தொல்லை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** :– இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.01.20 18:43:17 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.